**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**நாள். 10.09.2024**

**O.S. 34/2023**
**வா.சா.1 – ரெத்தினசிகாமணி**
**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் 1ம் வாதி கோவிலில் தலைவராக உள்ளேன். 2வது வாதி ஆவேன். வாதிகள் தரப்பு சாட்சியத்திற்கு என் எழுத்து மூல பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். நான் கடந்த நான்கரை வருடமாக தலைவராக உள்ளேன். எனக்கு வழக்கு ஆவணங்கள் விவரங்கள் பிறர் சொல்லி தெரியும் வழக்கை பற்றி தெரியும். நிரூபண வாக்குமூலம் வழக்கறிஞருக்கு நான் சொல்லி தயார் செய்யப்பட்டு என்னால் படித்துப் பார்க்கப்பட்டு பின்பு கையொப்பம் செய்யப்பட்டது. கீழ்க்கண்ட ஆவணங்களை எனது தரப்பு சான்றாவணமாக குறியீடு செய்யக் கேட்டுக்கொள்கிறேன்

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 22.02.1979 | வெள்ளையன் தோப்பு ஊர் இந்து நாடார் சமுதாயம் பெயரிலான விலை ஆவணம். 390/1979. | அசல் |
| வா.சா.ஆ.2 | 22.02.1979 | பெருமாள் நாடார் பெயரிலான விலை ஆவணம் 391/1979. | அசல் |
| வா.சா.ஆ.3 | 27.01.1981 | நேசமணி நாடாச்சி வாதிக்கு எழுதிக்கொடுத்த ரசீது | அசல் |
| வா.சா.ஆ.4 | 14.05.1981 | வெள்ளையன் தோப்பு ஊர் இந்து நாடார் சமுதாயம் பெயரிலான விலை ஆவணம். 1090/1981. | அசல் |
| வா.சா.ஆ.5 | 08.06.2011 | வாதிபெயரிலான கிரய ஆவண எண்.2457/2011 | அசல் |
| வா.சா.ஆ.6 | 13.01.2023 | வழக்கு சொத்திற்கான 01.01.1975 முதல் 12.01.2023 க்கான வில்லங்க சான்றிதழ் | இணைய வழி நகல் |

**கூடுதல் ஆவணம் குறியீடு செய்வதற்காக முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.**